## மே – 27 – பொதுக்காலம்8ம் வார ஞாயிறு

### மூவொரு இறைவன் பெருவிழா

### “இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (மத் 28:20)

### முதல் வாசகம் : இணைச்சட்டம் 4 :32 – 34, 39 – 40

உங்களுக்கு முற்பட்ட பண்டைக் காலத்தைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள், உலகில் மனிதனைப் படைத்த நாள் முதல், வானத்தின் ஒருமுனை முதல் மறுமுனை வரைக்கும் எங்காவது இத்தகைய மாபெரும் செயல் நடந்துண்டோ? அல்லது இதுபோல் கேள்விப்பட்டதுண்டா?நெருப்பின் நடுவிலிருந்து பேசிய கடவுளின் குரலொலியைக் கேட்டும், நீங்கள் உயிர்வாழ்ந்ததுபோல் வேறு எந்த மக்களினமாவது வாழ்ந்ததுண்டா?அல்லது, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்தில் உங்கள் கண்முன்னே உங்களுக்குச் செய்த அனைத்தையும் போல, சோதனைகள், அடையாளங்கள், அருஞ்செயல்கள், போர், வலிய கரம், ஓங்கிய புயம் மற்றும் அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள் மூலம் ஓர் இனத்தை வேறொரு நாட்டினின்று தமக்கென உரிமையாக்கிக்கொள்ள முன்வரும் கடவுள் உண்டா? மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள், அவரைத் தவிர வேறு எவரும் இலர்” என இன்று அறிந்து, உங்கள் உள்ளத்தில் இருத்துங்கள். நான் இன்று உங்களுக்குக் கட்டளையிடும் அவரது நியமங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுங்கள். அப்பொழுது உங்களுக்கும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் பிள்ளைகளுக்கும் எல்லாம் நலமாகும். மேலும், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு எக்காலத்திற்கும் கொடுக்கும் மண்ணில் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்

### இரண்டாம் வாசகம் : உரோமையர்8 : 14 - 17

சகோதர சகோதரிகளே கடவுளின ஆவியால் இயக்கப் படுகிறவர்களே கடவுளின் மக்கள்.மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம், ”அப்பா, தந்தையே” என அழைக்கிறோம்.நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்றுபகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமைப்பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப்பேறு பெறுபவர்கள், கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெறவேண்டும் அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்கு பெறுவோம்

### நற்செய்தி : மத்தேயு 28 : 16 – 20

அக்காலத்தில்பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒருமலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக்கண்டு பணிந்தார்கள். சிலரோ ஐயமுற்றார்கள். இயேசு அவர்களை அணுகி, ”விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது.எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என்று கூறினார்.

**தியானம் :** இன்று மூவொரு கடவுளின் பெருவிழா. தந்தை, மகன் தூய ஆவியாகிய மூவரும் ஒரே கடவுளாக இருக்கின்றார்கள் என்பதே எமது விசுவாசம். எவ்வாறு மூவரும் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றார்களோ அவ்வாறே நாமும் இணைந்திருக்க வேண்டும். கிளைகள் மரத்துடன் இணைந்துதான் இருக்க வேண்டும், தனியாக பிரிந்து போனால் அதனால் உயிர் வாழ முடியாது. இன்று பணத்திற்காகவும், சொத்திற்காகவும், அடித்துக்கொள்ளும், வெட்டிக் கொள்ளும் சகோதரர்கள் இல்லையா? ஒன்றாக ஒரு தொழிலை தொடங்கிவிட்டு, பின்பு பிரிந்து செல்பவர்கள் இல்லையா? அவர்களுக்குள்ளே வருகின்ற போட்டி மனப் பான்மையும், யார் பெரியவர் என்ற கேள்வியும் பிரிவினையை தோற்று விக்கின்றன. அக்காலத்தில் மக்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று அது சாத்தியமா? இவ்வுலக ஆடம்பரமான வாழ்வில் ஏற்பட்ட ஆசையும், கலாச்சார சீரழிவுகளும் முக்கிய காரணமாக அமைகிறது. ஒத்துப்போகின்ற தன்மையும், விட்டுக்கொடுக்கின்ற மனமும், மன்னிக்கும் குணமும் இல்லை. இதனால்தான் இன்று பிரிவினைகளும், அவமானங்களும். தாம் நினைத்ததை சாதிக்க துடிப்பவர்கள் அடுத்தவர்களின் கனவுகளை கலைத்துவிட்டுத்தான் தமது இலக்கை அடைகிறார்கள். ஆணாதிக்க மனமும், தான் என்ற அகம்பாவமும், குடும்பத்தை சீர் குலைக்கின்றது. மனைவி எப்போதும் பணிந்துதான் இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட ஆசைகள் இருக்கும் என்பதனை அறியாமல், தனது விருப்பு வெறுப்புகளை அவர்கள்மேல் திணித்தால் அக்குடும்பத்தில் ஒற்றுமையும் சமாதானமும் எப்படி நிலைக்க முடியும்? விட்டுக்கொடுப்பவர்கள் இருக்குவரை இப்படிப்பட்ட அதிகார வர்க்கத்தின் கைதான் ஓங்கி நிற்கும். எனவே கடவுளின் படைப்பில் எல்லோரும் சமமே என்ற உணர்வுடன் எல்லோரும் ஒற்றுமையுடன் வாழப் பழக வேண்டும். அப்போது, குடும்பங்களில் அமைதி நிலவும். குடும்பத்திலே, சமுதாயத்திலே ஒற்றுமை நிலவவும், விட்டுக்கொடுக்கின்ற, மன்னிக்கின்ற மனப்பான்மை பெருகவும் வேண்டுவோம்.